## சாட்சிய வாக்குமூலம்
## மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

எ.ம.சா. 1 நாள் : 23.06.2026

GWOP. No. 20/2024

பெயர் சுகந்தி த/பெ முத்துக்குமரசாமி

வயது 33 ஊர் மயிலாடுதுறை

சாட்சி அழைக்கப்பட்டு திருமதி. வீ. அமுதப்பிரியா, இருக்கை எழுத்தர் நிலை – 2 என்பவரால் உறுதி மொழிசெய்யப்படுகிறார்.

குறுக்கு விசாரணை:

என் தகப்பனார் CRC ல் நடத்துனராக வேலை பார்த்தார் என்றால் சரிதான். எங்கள் குல வழக்கப்படி மண மகன் வீட்டில் தான் திருமணம் செய்து வைப்பார்கள் என்றால் சரிதான். எங்கள் திருமணத்தை என் மாமானர் தான் செலவு செய்து நடத்தினார் என்றால் சரியல்ல. திருமணத்திற்கு பிறகு நான் படிப்பிற்காக என் அப்பா வீட்டிற்கு வந்தேன் என்றால் சரிதான். 2015ல் நான் படிப்பு முடிந்து என் கணவர் வீட்டிற்கு சென்றேன் என்றால் சரியல்ல. 2013லேயே வந்து விட்டேன். 2015 நான் கர்ப்பம் தரித்தேன் என்றால் சரியல்ல. 2014ல் தான் நான் கர்ப்பம் தரித்தேன். இரண்டு மாதங்களில் எனக்கு கருச்சிதைவு ஏற்பட்டது. இரண்டாவது முறையாக 2017ல் கர்ப்பம் தரித்தேன் என்றால் சரியல்ல. இரண்டாது முறையும் கருசிதைவு ஏற்பட்டது என்றால் சரிதான். அவ்வாறு கருசிதைவு ஏற்பட்டதற்கு என் உடல்நலகுறைவு தான் காரணம் என்று மருத்துவர் சான்று வழங்கினார் என்றால் சரியல்ல. அதற்கு பிறகு எனக்கு IUI சிகிச்சை அளிக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த சிகிச்சை எனக்கு பலனளிக்கவில்லை என்றால் சரிதான். டாக்டர் சரஸ்வதி மணி என்பவரின் ஆலோசனைப்படி KMCல் சிகிச்சை பெற்றேன் என்றால் சரியல்ல. நான் KMCல் சிகிச்சை எடுத்தேன் ஆனால் அவரின்ஆலோசனைப்படி சிகிச்சை எடுக்கவில்லை. அந்த சிகிச்சை எனக்கு பலனளிக்கவில்லை என்றால் நான் அதை தொடரவில்லை. அதற்கு பிறகு நான் பொள்ளாச்சியில் உள்ள fertility center ல் நான் சிகிச்சை எடுத்தேன் என்றால் சரியல்ல. பொள்ளாச்சியில் எனக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் தங்கி சிகிச்சை எடுத்து கொள்ள சொன்னார் என்றால் நான் பொள்ளாச்சிக்கு சிகிச்சைக்கு செல்லவில்லை. பொள்ளாச்சியில் சிகிச்சை பெற்ற மூன்று மாத காலமும் மனுதாரர் தான் என்னை பார்த்துக்கொண்டார் என்றால் சரியல்ல. அதற்காக மனுதாரரின் அப்பா ரூபாய் 75 ஆயிரம் செலவு செய்தார் என்றால் சரியல்ல. தஞ்சாவூரில் உள்ள MR மருத்துவமனையில் சிகிச்சை எடுத்தனே் என்றால் சரிதான். அதற்கான செலவுகளை மனுதாரர் தான் செய்தார் என்றால் சரியல்ல. அந்த சிகிச்சையும் எனக்கு பலனளிக்கவில்லை என்றால் தொடரவில்லை. அவ்வாறு சிகிச்சையை தொடராதது என்னுடைய தவறு என்றால் சரியல்ல. நானும் என் கணவரும் சேர்ந்து தான் முடிவு எடுத்து சிகிச்சையை தொடரவில்லை. 2018 ல்

சென்னையில் உள்ள போம் மருத்துவமனையில் IVF சிகிச்சை மட்டும் தான் பெற்றேன். அந்த சிகிச்சையின் பலனாகத்தான் என் மகன் பிறந்தான் என்றால் சரிதான். அந்த சிகிச்சைக்காக மனுதாரர் பணம் செலவு செய்தார் என்றால் சரியல்ல. என் அப்பாவும் என் அண்ணனும் செலவு செய்தார்கள். என் அப்பாவும் என் அண்ணனும் செலவு செய்ததற்கான ஆவணங்களை தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் கீழ் கோர்டில் DVC மனுவில் தாக்கல் செய்துள்ளேன். இந்த மனுவில் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. அந்த DVCமனுவில் தீர்ப்பு ஏற்பட்டது என்றால் சரிதான். DVC மனுவின் நகலை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. அந்த மனுவின் தீர்ப்பின் நகலை தாக்கல் செய்தால் மருத்துவ சிகிச்சை ஆவணங்களின் விவரம் தெரியவரும் என்றால் சரிதான். அதனால் தான் DVC மனுவின் தீர்ப்பு நகலை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் குழந்தை Pre–meture குழந்தை என்றால் சரிதான். சூர்யா மருத்துவமனையில் வைத்து அவருக்கு இன்குபெட்டரில் வைத்து சிகிச்சை கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அதற்காக மனுதாரரின் அப்பா ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் செலவு செய்தார் என்றால் சரியல்ல. நான் சென்னையில் இருந்தபோது அண்ணாநகரில் வீடு எடுத்து தங்கியிருந்தேன் என்றால் சரிதான் பொதுவாக தலை பிரசவம் பெண் வீட்டில் செய்வார்கள் என்றால் சரிதான். என் அப்பாவிற்கு வசதியில்லாததால் மனுதாரர் தான் என்னை பார்த்துக்கொண்டார் என்றால் சரியல்ல. குழந்தை பிறந்து அதற்கு இடது கண் கோளாறு ஏற்பட்டது என்றால் சரியல்ல. நானே என் நிரூபண வாக்குமூலத்தில் மேற்படி விவரத்தை சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. சங்கராநேந்ரா மருத்துவமனையில் அந்த கோளாறுக்காக சிகிச்சை பெறவில்லை. பிறகு பாண்டிச்சேரி அரவிந்த் கண் மருத்துவமனையில் சிகிச்சையளிக்கப்பட்டது என்றால் சரியல்ல. அதற்கான செலவுகளையும் மனுதாரர் செய்தார் என்றால் சரியல்ல. 10.03.2020ல் குழந்தைக்கு பழநி முருகன் கோவிலில் மொட்டையடிச்சு காது குத்தினோம் என்றால் சரிதான். அப்போது மனுதாரரின் அப்பா என் குழந்தைக்கு ஒரு பவுன் செயின் போட்டார் என்றால் சரியல்ல. அதற்கான செலவுகளையும் மனுதாரரின் அப்பா தான் செய்தார் என்றால் சரியல்ல. 16.03.2020ல் குழந்தையின் முதல் பிறந்த நாளில் மனுதாரரின் அப்பா தங்கத்தில் அரைஞான்கயிறும் இரண்டு வளையல்களும் மொத்தம் மூன்று சவரன் கொடுத்தார் என்றால் இல்லை. 17.03.2020 தேதியில் ஊட்டியில் மாரியம்மன் கோவிலில் மனுதாரரின் அப்பா குழந்தையின் நலனுக்காக மூவாயிரத்திற்கு அன்னதானம் செய்தார் என்றால் சரியல்ல. மனுதாரரின் அப்பா விவசாயம் செய்து சொந்தமாக சொத்துக்களும் ஊட்டியில் லாட்ஜீம் வைத்துள்ளார் என்றால் சரிதான். அவை அனைத்தும் மனுதாரரின் அப்பாவின் சுய சம்பாத்திய சொத்துக்கள் என்றால் சரியல்ல. நான் மனுதாரருக்குரிய பாகத்தை பிரித்து கொடுக்கவேண்டுமென்று தகராறு செய்தேன் என்றால் சரியல்ல. மனுதாரரின் அப்பாவிடம் நான் சண்டைபோட்டு திட்டினேன் என்றால் சரியல்ல. மனுதாரருக்கு எந்தவித கெட்டபழக்கமும் கிடையாது என்றால் சரியல்ல. அவருக்கு எந்தவித கெட்டபழக்கமும் கிடையாது

M. Surjanthi

என்றும் வழக்கிற்காக குடிகாரர் என்று சொல்கிறனே் என்றால் சரியல்ல. நான் மனுதாரரின் பெற்றோருக்கு எதிராக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். நான் குழந்தையை வம்படியாக மயிலாடுதுறைக்கு அழைத்து வந்தேன்எ ன்றால் சரியல்ல. நான் தற்போது வேலை பார்த்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான்வேலை பார்ப்பதை மறைத்து சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் குழந்தை என்னிடம் இருப்பதை விட என் கணவரிடம் இருப்பது தான் மனரீதியாகவும் பொருளாதார வசதியாகவும் இருக்கும் என்றால் சரிதான். நான் வேலை பார்த்துவருவதால் என் குழந்தைகயை சரியாக பராமரிக்கமுடியாது என்றால் சரியல்ல. நான் வேலைக்கு போகும் சமயத்தில் என் குழந்தையை என் அம்மா அப்பா பார்த்துவருவார்கள் என்றால் சரியல்ல. நான் வேலைக்கு போகவில்லை. குழந்தையின் நலனுக்காக மனுதாரர் பாதுகாப்பில் இருப்பது நல்லது என்றால் சரியல்ல.

M. [signature]

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சுருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

[signature]

மாவட்ட நீதி[illegible]
மயிலாடுதுறை

23/06/2026